# தமிழ்க் கிறித்தவ இலக்கியத்தில் இயற்கை

# ( Nature in Tamil Christian Literature )


பதிப்பாசிரியர்கள்

முனைவர் அருட்சகோ. ஜெஸின் பிரான்ஸிஸ்

முனைவர் அருள்தந்தை. சி. மணி வளன் சே. ச.



கிறித்தவ ஆய்வு மையம்
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 2.

தமிழாய்வுத் துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 2.

# நூல்விபரம்


| | |
|---|---|
| நூலின் பெயர் | : தமிழ்க் கிறித்தவ இலக்கியத்தில் இயற்கை ( Nature in Tamil Christian Literature) |
| பதிப்பாசிரியர்கள் | : அருள்சகோ. முனைவர் **ஜெஸின் பிரான்ஸிஸ்**<br>அருட்தந்தை முனைவர் **சி.மணி வளன், சே.ச** |
| நுவல் பொருள் | : ஆய்வுக் கட்டுரைகள் |
| பதிப்பு | : முதற்பதிப்பு – ஜனவரி – 2016 |
| மொழி | : தமிழ் |
| உரிமை | : தமிழாய்வுத்துறை<br>புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி<br>திருச்சி – 620 002 |
| எழுத்துரு | : 10.5 புள்ளி |
| பக்கங்கள் | : xiv+338=352 |
| அச்சிட்டோர் | : தி பிரிண்டிங் ஹவுஸ்<br>காஜாமலை, திருச்சி – 23, போன் : 2420121 |
| நூல் அளவு | : டெம்மி |
| நூல் வெளியீடு | : தமிழாய்வுத்துறை<br>புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி<br>திருச்சி – 620 002.<br><br>கிறித்தவ ஆய்வு மையம்<br>தூயவளனார் தன்னாட்சிக் கல்லூரி<br>திருச்சி - 620 002. |
| விலை | : 150/- |
| ISBN No. | : 978-93-80394-85-5 |

## பொருளடக்கம்


1. தேம்பாவணியில் சித்திரக்கூடப் படலம் சித்திரிக்கும் இயற்கை
   - முனைவர் அருட்சகோதரி ஜெஸின் பிரான்ஸிஸ் ... 1
2. தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரின் இலக்கியங்களில் இயற்கை
   - அருள்திரு. முனைவர் சி. மணி வளன், சே.ச., ... 5
3. அனந்தம்மாள் கவிதையில் இயற்கையின் கோலோச்சுதல்
   - தாயம்மாள் அறவாணன் ... 12
4. தேம்பாவணியில் இயற்கை வருணனை
   முனைவர் பா.தனபாக்கியம் ... 17
5. இயேசுபிரான் பிள்ளைத்தமிழில் இயற்கை வருணனை
   - முனைவர்.சகோ.அ.அருள்சீலி ... 20
6. நசரைக் கலம்பகத்தில் சூழலியல் ஆன்மீகம்
   - அருட்சகோதரி முனைவர் அ. ஆரோக்கிய ஜெயசீலி .... 27
7. கித்தேரியம்மாள் அம்மானையில் இயற்கை
   - முனைவர் கா.வாசுதேவன் ... 32
8. இயற்கைப் படைப்பில் விவிலியமும் தமிழ் இலக்கியங்களும்
   - முனைவர் மு. அருணாசலம் ... 36
9. கிறித்தவ இலக்கியத்தில் இயற்கை ... 44
   - முனைவர் அ.ஜெஸிந்தாராணி
10. துரை. மாலிறையனின் அருள்நிறை மரியம்மை காவியத்தில் இயற்கை
    - முனைவர் ஔவை. இரா. நிர்மலா ... 48
11. இயற்கை கற்பிக்கும் பாடம்
    - முனைவர் க. லதா ... 56
12. தேம்பாவணியில் சங்கு
    - முனைவர் யாழ். சு. சந்திரா ... 61
13. அருள்தந்தை சி. மணி வளன் சே.ச. அவர்களின்
    'புதிய பெத்லகேம் குறவஞ்சி'யில் இயற்கைக் குறித்த புனைவுகள்
    - முனைவர் ஞா.குருசாமி ... 66
14. தேம்பாவணியில் இயற்கையின் பதிவுகள்
    - முனைவர் ஆ.அங்கமுத்து ... 70

# இயற்கை கற்பிக்கும் பாடம்

முனைவர் க. லதா,
இணைப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமாக் கல்லூரி, மதுரை.

உலகின் வரம் இயற்கை. இறைவன் தொடக்கத்தில் இயற்கையைப் படைத்தார். அதன் பிறகே பிற அனைத்து உயிர்களையும் படைத்தார். இயற்கையின்றி மனிதன் இல்லை என்பதை மனிதனுக்கு உணர்த்தவே இறைவன் இயற்கையை முதலில் படைத்திருக்க வேண்டும். இலக்கியங்கள் தோன்றிய காலம் முதல் மனிதன் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் காணக்கிடைக்கின்றன. இயற்கையைக் கண்டு மனிதன் கற்றுக் கொண்ட பாடங்கள் பலப்பல. வித்து ஒன்று மண்ணில் விழுந்து, புதைந்து, மீண்டும் மண்ணைக் கிழித்துக் கொண்டு வெளியே வந்து, இலைவிட்டு, வளர்ந்து, பூத்து, காய்த்து, கனிந்து மீண்டும் மண்ணுக்கே உரமாக மாறுகிறது. மனிதன் ஒருவன் எவ்வாறு வாழவேண்டும் என்பதற்கு இதுவே சிறந்த சான்றாகும்.ஒரு சிறுவிதையே வாழ்வின் அர்த்தத்தைக் கற்பிக்கிறது என்றால் நம்மைச் சுற்றியிருக்கும் ஒவ்வொரு செடியும் கொடியும் மரமும் மனிதனுக்குக் கற்பிக்கும் பாடங்கள் பலப்பல என உணரலாம்.

இயற்கை கற்பிக்கும் இத்தகைய பாடங்களைப் புலவர்கள் கலைநயத்துடன் தம்படைப்புகளினூடே விவரிக்கும் விதம் எண்ணி எண்ணி இன்புறத்தக்கது. கிறித்தவ இலக்கியங்களுள் சிரமேற்கொள்ளக்கூடிய தேம்பாவணிக் காப்பியத்தில் வீரமாமுனிவர் இயற்கையை வருணிக்கும் தன்மையும் அதன் வழியே அவர் கூற விழையும் கருத்துக்களும் இனிமையானவை. கருணையன் மாட்சிப் படலத்தில் வீரமாமுனிவர் இயற்கையைக் குறித்துச் செல்லும் ஒவ்வாரு பாடலிலும் அவ்வியற்கை மனிதர்களுக்கு ஒரு பாடத்தைக் கற்றுக்கொடுப்பதாக அமைத்துள்ளார் வீரமாமுனிவர்.

இயேசுநாதரின் முன்னோடி எனப் போற்றப்படும் கருணையனின் மாண்பு கூறும் கருணையன் மாட்சிப் படலத்தில் இடம்பெறும் இயற்கை குறித்த பாடல்களில் இயற்கை கற்றுத்தரும் பாடங்களை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். கருணையனின் பெற்றோரான சக்கரீயனும் எலிசபெத்தும் இல்லறமாம் தூய நல்லறத்தில் நின்று கொடையிலும் சிறந்து விளங்கியதாகத் தேம்பாவணி எடுத்துக்காட்டுகிறது.